அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நுண்கலை

# தருமபுரம் அ. கோவிந்தராஜனின் இசைப்பணிகள்

## *The musical works of Dharmapuram A. Govindarajan*

**முனைவர் செ.கற்பகம்,** இணைப்பேராசிரியர், இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***Dr. S. Karpagam,*** *Associate Professor, Department of Music, Tamil University, Thanjavur*

***Abstract***

*Among the sixty-four arts, music is the most subtle and intricate art form. This exceptionally significant art has been nurtured with great effort by scholars, devotees, musicians, saints, and philanthropists who lived in different periods, bringing it to its present exalted state. Among such scholars and musicians, Dharumapuram Govindarajan is a highly notable figure. He has carved a unique path for himself in music, introducing innovations and presenting us with various musical forms. The purpose of this article is to examine his musical contributions.*

***Keywords:*** *Musical forms, Nagaswaram, Pallavi, Mallari, Kriti, Ragamalika*

**ஆய்வுச்சுருக்கம்**

ஆயகலைகள் அறுபத்து நான்கில் மிக நுட்பமான நுண்ணியக்கலை இசைக்கலையாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையினை ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த இயலாளர்கள், அடியார்கள், இசைக் கலைஞர்கள், அருளாளர்கள், கொடைவள்ளல்கள், முதலானவர்கள் அரும்பாடுபட்டு வளர்த்து, தற்போது மிக உன்னதமான நிலையை அடையச் செய்திருக்கிறார்கள். அத்தகைய இசை இயலாளர்கள், இசைக் கலைஞர்களுள் தருமபுரம் கோவிந்தராஜன் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இசையில் தனக்கென்று தனி வழியினை வகுத்துக் கொண்டு, புதுமையை புகுத்தி பல்வேறு வகையான இசை வடிவங்களை நமக்கு அளித்துள்ளார். அவரின் இசைப்பணியினை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

***திறவுச்சொற்கள்:*** இசை வடிவங்கள், நாகஸ்வரம், பல்லவி, மல்லாரி, கீர்த்தனை, இராகமாலிகை

**முன்னுரை**

தருமையாதீனம் தமிழகத்துத்தென்மையான சைவ ஆதீனங்களுள் குறிப்பிடத் தக்கதாகும். இவ்ஆதீனம் மாயூரம் நகருக்குக் கிழக்கே ஒரு கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்டது. செந்தமிழ்

வளர்ச்சிக்கும், சிவநெறி உயர்வுக்கும் பெரும் தொண்டாற்றி வரும் பெருமை மிக்கது தருமபுரம். இத்தகு சிறப்பு மிகுந்த இவ்வூரில் பிறந்து தனது பெயரின் முன்னாள் ஊரின் பெயரை முன்னாள் கொண்டவர் தருமபுரம் அ.கோவிந்தராஜன் ஆவார். அவரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைப்பணிகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**பிறப்பு**

கோவிந்தராஜன் அவர்கள் சிறந்த நாதஸ்வர மேதையும், தருமபுர ஆதீன வித்வானான எஸ். அபிராமி சுந்தரம் பிள்ளை சாராதாம்பாளின் மூத்த மகனாக 30.06.1933 இல் பிறந்தார். திருப்பதி வேங்கடாஜலபதியை வேண்டி பிறந்ததலால் கோவிந்தராஜன் எனப் பெயர் சூட்டினர். இவரது தந்தை நாதஸ்வரக்கலைஞராகத் திகழ்ந்தார். இவரின் தாயார் நன்றாகப் பாடக்கூடியவர்.இவர் மேடைக்கச்சேரி செய்யாவிட்டாலும் இவருக்கு இயற்கையாக இசை அறிவு மிக்கிருந்தது.

இவரது தந்தை அபிராமிசுந்தரம் பிள்ளை நாதஸ்வரக்கலையில் தேர்ந்தவர். இவர் வாசிப்பின் மூலம் பெற்ற டாலர்களை நாதஸ்வரத்தில் மேலிருந்து கீழ் அணைசு வரை தொங்கவிட்டுருப்பார். இவரின் அன்பான பேச்சும், அனைவரையும் அரவணைத்துக் கொள்ளும் செயலின் காரணமாகச் சகல வித்வான்கள் இவர் மீது பெரும் விரும்பம் உடையவர்களாக இருந்தனர். இவர் பல்லவி வாசிப்பதில் தமக்கு மிக்காரில்லையென்ற அளவில் தன்னிகரற்று விளங்கினார். இவருடைய பல்லவிகள் சற்று நீளமானதாகவும், கடினமானதாகவும் இருக்கும். இவருடைய தத்தகாரப் பல்லவிகள் இவரிடம் கொஞ்சிக் குலாவும். இவரின் இசைக்கும் பல்லவிக்கென்றே தனி இரசிகர் கூட்டமே உண்டு.

கோவிந்தராஜனுடன் உடன் பிறந்தவர்கள் நால்வர். மூன்று பெண் பிள்ளைகளும், ஒரு ஆண்மகனும் ஆகும். கோவிந்தராஜன் அவர்களின் தந்தை வழிபாட்டனாராகிய சுவாமிநாதபிள்ளை அவர்கள் சிறந்த தவில் கலைஞர். தாய் வழிப் பாட்டனார் சிவகொழுந்து பிள்ளை அவர்கள் சிறந்த நாதஸ்வரக் கலைஞர் ஆவார்.

**இசைக்கல்வி**

கோவிந்தராஜன் அவர்கள் பள்ளிப்படிப்பை 1943 ஆம் ஆண்டு ஸ்ரீகுருஞான சம்பந்தர் மேல்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்து முடித்தார். தனது தந்தையிடமே நாதஸ்வரம் பயின்றார். இவருக்கு தந்தை மகன் என்ற முறையில் இசைக்கற்பிக்காமல் மாணவன் முறையில் தான் சிஷ்யை நடக்கும். பின்னர் 1948 முதல் 1959 வரை இரண்டு ஆண்டுகள் திருமெய்ஞானம் நாராயணசாமி பிள்ளையிடம் நாகஸ்வரம் பயின்றார். நாகஸ்வரத்தில் உயர் பயிற்சியினை பதினொரு ஆண்டுகள் திருமாகாளம் வி. சோமாஸ்கந்தன் அவர்களிடம் குருகுல முறையில் பயிற்சிப் பெற்றார். பின்னர் 1956 முதல் தந்தையாருடன் இணைந்து கச்சேரிகள் வழங்கினார். 1957 இல் அண்ணாமலைப்பல்கலைக்கழக இசைத்துறையில் சேர்ந்து சங்கீத

பூஷணம் என்ற பட்டயப்படிப்பில் முதல் தர மாணவராய் 1959 ஆம் ஆண்டு தேர்ச்சிப் பெற்றார்.

**திருமண வாழ்க்கை**

கோவிந்தராஜன் அவர்கள் சீர்காழியைச் சேர்ந்த நாதஸ்வர கலைஞரான வேணுகோபால பிள்ளையின் மகளான வே. திரபுர சுந்தரியை 1953 ஆம் ஆண்டு மணந்தார். இவரது திருமணத்திற்கு மதுரை பொன்னுத்தாயி அம்மாளின் நாகஸ்வர கச்சேரி நிகழ்ந்தது. கோவிந்தராஜன் அவர்கள் இசைப்பயிற்சி மேற்கொள்ளும் பொழுதும், கச்சேரிகளுக்கும் இவரது மனைவி திரிபுர சுந்தரி தான் சுருதி பெட்டி இசைப்பார்.

இவர் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் பயின்ற பொழுது எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் முதல்வாகப்பணியாற்றினார். அப்பொழுது அவரிடம் கோவிந்தராஜன் அவர்கள் வாய்ப்பாட்டிசைப்பயின்றார். இவருடன் உடன் பயின்றவராகச் சிறந்த திரையிசைப்பின்னணிப் பாடகர் தாராபும் சுந்தர ராஜன் அவர்கள் விளங்கினார்.

**இசைப்பயிற்சியும் இசைத்திறனும்**

கோவிந்தராஜன் அவர்கள் அதிகாலையில் இசைப்பயிற்சி செய்வதைத் தன் கடமையாகக் கொண்டிருந்தார். இவர் கச்சேரிகள் இல்லாத நாட்களில் காலை முதல் மாலை வரை நாகஸ்வரத்தைச் சுருதி பெட்டியோடு இணைத்து இசைத்துக் கொண்டே இருப்பார். அவ்வாறு செய்யும்பொழுது சில நேரங்களில் இரவும் வந்துவிடும். அவ்வளவு கடின அசுர சாதகத்தை மேற்கொள்வார். பயிற்சியின் பொழுது சரளி வரிசைகளை அதிகம் பயிற்சி மேற்கொள்வார்.

கச்சேரிகளில் தவில் இசைக்கலைஞர்கள் வாசிக்கும் சொற்களைப் போல சுத்தமான சுரங்களை நாகஸ்வரத்தில் இசைப்பார். உதாரணமாக,

இலங்கையைச் சேர்ந்த தவில் கலைஞர் தட்சிணாமூர்த்தி பிள்ளை கோவிந்தராஜனை அழைத்து உங்கள் நாதஸ்வரத்தில் பேசும் அனைத்தும் எங்கள் தவிலில் பேசும். ஆனால் தவிலில் நான் இசைக்கிற சொற்களை தங்கள் நாகஸ்வரத்தில் வாசிக்க இயலுமா என்று கேட்டார். அதற்கு தன்மையாக என் நாகஸ்வரத்தில் வாசிக்க முடியுமா என்று பார்க்கிறேன் என்று கூறி தெட்சிணாமூர்த்திப் பிள்ளை இசைத்த சொல்லை நாகஸ்வரத்தில் இசைத்துக்காட்டினார். தெட்சிணாமூர்த்தி பிள்ளை நான் தவிலில் வாசித்ததை விட தாங்கள் வெகுசுத்தமாக இசைத்தீர்கள். அதற்கு தங்களின் கடினமானப் பயிற்சி தான் காரணம் என்று கூறி மனமாரப் பாராட்டினார். இதன்பின் இலங்கை, யாழ்ப்பாணம் போன்ற நாடுகளில் இவரின் நாதஸ்வர நிகழ்ச்சி நடந்தது.

**ஆராய்ச்சிகள்**

கோவிந்தராஜன் அவர்கள் ஒரு அட்சரத்தில் எட்டு ஸ்வரம் மற்றும் பதினாறு ஸ்வரங்களை இசைக்க முயற்சி செய்தார்.

கீழ் மத்யமம் முதல் மேல் மத்யமம் வரை ஒரே சுருதியில் நாகஸ்வரத்தில் வாசிக்க முயற்சி செய்தார். சீவாளியின் நீளத்தைக் குறைத்து வாசிக்கும் முறையை ஆய்வு செய்தார். இவர் இல்லத்தில் உள்ள சுவர் கடிகாரத்தில் ஸ,ப என்ற ஸ்வரம் கேட்கும் படி கம்பியில் மெழுகு வைத்து மாற்றி அமைத்தார்.

நாகஸ்வரம் பற்றி இவரின் ஆழ்ந்த கருத்து என்னவென்றால் , நாகர்கள் என்னும் ஓர் இனம் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளதாகவும் அவர்கள் அந்தமான் போன்ற கடல் பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளதாகவும், கடல்கோள்கள் வந்தபொழுது அவர்கள் கிழக்கு கடற்கரை பகுதிக்கு வந்த்தன் மூலம் அவர்களின் மூலமாகவே நாகசுரம் கிடைத்தது என்பது இவருடைய கருத்தாகும்

**கோவிந்தராஜன்அவர்களின்கொள்கைகள்**

நாகசுரக்காரர்கள் முதலில் சீவாளி நனைத்து ப்பீ...ப்பி எனச் சத்தம் எழுப்புவார்கள். ஆனால் கோவிந்தராஜன் அவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார். சீவாளியை நனைத்து உடனேவாசிக்கஆரம்பித்துவிடுவார்

நாகசுரத்தில் பொதுவாக 2, 3 சீவாளிகளும், குச்சிகளும் தொங்கவிடப்பட்டிருக்கும். அவை ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண்டு அதில் சிக்கு ஏற்பட்டு விடும். ஆனால் கோவிந்தராஜன் அவர்களின் நாதஸ்வரத்தில் அவ்வாறு சிக்கு விழாமலும், உடன் வாசிப்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் அது போன்று பழக்கத்தையே ஏற்படுத்தினார். தனது இவர் நாதஸ்வரத்தில் சுருதி சேர்க்கும்பொழுது ஸ்,ப என்ற ஸ்வரத்திற்கு அட்சரம் கொடுத்து தாளத்துடன் சுருதி சேர்ப்பார். கச்சேரி முடிய 10 மணிநேரம் அல்லது 12 மணி நேரம் ஆனாலும் இடையில் இயற்கை உபாதைக்காக வெளியே செல்லமாட்டார். கச்சேரியில் நாதஸ்வரம் வாசிக்கும்பொழுது கால் வெளியே தெரியகூடாது என்றும், அவ்வாறு தெரிவது பார்வையாளர்களை அவமரியாதை செய்வது போல் இருக்கக்கூடும் என்றும் கூறுவார்.

மேடையில் கச்சேரி வாசிக்க அமர்ந்த பிறகு வாத்தியகாரர்கள் இடையே வர அனுமதிக்க மாட்டார். பெரிய கலைஞராக இருந்தாலும் ஒன்றாக மேடையில் அமருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவர் பயன்படுத்திய சுருதி பெட்டி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தாளம் போட ஞானம் எவ்வளவு வேண்டுமோ சுருதி போட அவ்வளவு நிரம்பிய ஞானம் வேண்டும் என்பது இவரது கருத்து.

நாகஸ்வரத்தில் சாகித்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார். நாகஸ்வரம் வாசிக்கும்பொழுது சாகித்யத்திற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்து பாடுவது போன்றே வாசிப்பவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாடங்கள் கற்றுக்கொண்டதன்

காரணத்தினால் சாகித்யத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாசிப்பதை தனது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தருமபுரம் குருமகா சன்னிதானம் மடாதிபதியாக பொறுப்பேற்ற பொழுது இவர் கல்யாணி இராகத்தையே அவருக்கு மாலையாக அணிவித்தார். அப்பொழுது சன்னிதானம் கல்யாணி இராகத்தை இனிமேலும் வாசிக்க மாட்டாயா எனக் கேட்ட பொழுது, 'இனிமேல் வாசிக்க மாட்டேன்" என்றும் உறுதிமொழியாகக் கூறியுள்ளார். அதை தன் இறுதிகாலம் வரை பின்பற்றியும் உள்ளார். இவருடைய மற்றொரு குணம் ஒருவர் சங்கீதத்தில் மிகச்சிறந்து விளங்கினார் என்ற அவருக்கு தலைவணங்குவார். சங்கீதத்தில் திறமை இருந்தால் மட்டுமே மதிப்பார். புகழுக்காக அல்ல. இவ்வாறு இவருடைய கொள்கை இருந்துள்ளன.

**தவிலிசைக்கலைஞர்கள்**

தருமபுரம் கோவிந்தராஜன் அவர்கள் பல மூத்த தவில் கலைஞர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவே திகழ்ந்தார். யாழ்ப்பாணம் தெட்சிணாமூர்த்தி, வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, இராகவப்பிள்ளை, முத்துக்குமார பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வளையப்பட்டி சுப்ரமணியம், அரித்துவார மங்கலம் பழனிவேல், டி.ஆர். கலியமூர்த்தி , வேதாரண்யம் வி.ஜி. பாலசுப்ரமணியன். மன்னார்குடி வாசுதேவன், திருப்பங்கூர் முத்துகுமார சாமி போன்றோர் இவருடன் தவிலிசைத்துள்ளனர். அவருடைய சமகாலத்தில் வாழ்ந்த நாகஸ்வர வித்வான்களில் குறிப்பிடத்தக்கவர்களாக திருமெய்ஞானம் நடராஜசுந்தரம், ஆண்டாங்கோவில் செல்வரத்னம் போன்றோர் திகழ்கின்றனர்.

**ஆசிரியப்பணி**

சென்னை இசைக்கல்லூரியில் இசை ஆசிரியர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. அதில் கோவிந்தராஜன் அவர்கள் கலந்து கொண்டார். சில காரணங்களால் அந்த வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. இதன் பிறகு மீண்டும் சென்னையில் திரு. டி.எம். தியாகராஜன் அவர்கள் நடத்திய நேர்காணலில் தேர்ச்சிப் பெற்று மதுரை இசைக்கல்லூரியில் விரிவுரையாளராக 1979 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார். இவர் பதினான்கு ஆண்டுகள் வேலைப்பார்த்து 30.06.1993 அன்று பணி ஓய்வுப் பெற்றார்.

**விருதுகளும் ,பட்டங்களும்**

சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் ‘‘சங்கீத பூஷணம்’’ பட்டமும், திருவீழிமிழலையில் ‘‘நாகஸ்வர மணி’’ என்ற விருதினையும், திருப்பதியில் ‘‘நாயன இன்னிசை

வேந்தர்" பட்டமும், நாவலர் நெடுஞ்செழியனால் "கம்பீரசுனாதலய சச்சபுர சாகரம்" என்ற பட்டமும், இலங்கையில் "ஈழத்தின் இசை அரசன்" என்ற பட்டத்தினையும் பெற்றார்.

**இசைப்படைப்புகள்**

தருமபுரம் கோவிந்தராஜன் அவர்கள் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சரளிவரிசைகளை இயற்றியுள்ளார். இவர் அதிகாலையில் தன் முதற்பயிற்சியாகச் சரளி வரிசைகளையே பயிற்சி செய்தார். அந்த பழக்கத்தைத் தன் இறுதிகாலம் வரை மேற்கொண்டார். அவற்றை தன்னிடம் பயிலும் மாணவர்களுக்கும் கற்பித்து வந்தார். இந்த சரளி வரிசைகளைப் பயிற்சி செய்வதினால் ஒருவர் இராக ஞானமும், ஸ்வர ஞானமும், தாள ஞானம் பெற முடியும் என்று நம்பினார். இவர் பயிற்சி வடிவங்களை மாயாமாளவகௌளை, ஹேமாவதி, அனுமதோடி, மேச கல்யாணி போன்ற நான்கு இராகங்களிலும், சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீர்ணம் ஆகிய ஐந்து தாளங்களிலும் எட்டுக்காலங்களிலும் பயிற்சியளித்தார்.

மேலும் ஜண்டை, மேல்ஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், தத்தகார ஸரளி வரிசைகளையும் இயற்றியுள்ளார்.

**பல்லவிகள்**

மனோதர்ம சங்கீதப்பிரிவுகளுள் ஒன்று பல்லவி ஆகும். கோவிந்தராஜன் அவர்கள் காம்போதி, நடபைரவி, பேகடை, ரிஷபப்பிரியா, சாவித்திரி, பைரவி, கல்யாணி, வாசஸ்பதி, ஹம்ஸாநந்தி போன்ற இராகங்களிலும் ஆதி,ரூபகம், ஆதி (மிஸ்ரகதி), கண்ட நடை, திஸ்ரநடை, திஸ்ரதிருபுடை ஆகிய தாளங்களிலும் இயற்றியுள்ளார். இவரது பல்லவிகள் எளிமையாகவும், எளிய சாகித்திய அமைப்புடனும் இயற்றியுள்ளார்.

உதாரணமாக,

**இராகம் :வாசஸ்பதி** **தாளம்:ஆதி (கண்ட நடை)**

**மனமிரங்கிட இன்னும் தாமதமா**

**முருகா சுந்தரவதனத்தோடு**

**மல்லாரி**

இறைவனின் ஆலய உலா அல்லது வீதி உலாவின் பொழுது, வாகனத்திலோ வைத்து தூக்குவோர்க்கு மல்லர் என்ற பெயர் இருந்துள்ளது. அத்தகைய மல்லர்கள் இறைவனை தம் தோளிலே தூக்கி நடைபோடும் பொழுது உற்சாகத்துடன் எழுப்பும் ஒலிக்கு மல்லரி என்ற பெயர் இருந்ததாகவும் , அதுவே வழக்கில் திரிந்து மல்லாரி என்ற பெயர் மாற்றம் பெற்றதாகவும் கூறுவர். மல்லாரிக்குரிய இராகம் கம்பீரநாட்டையாகும். பழந்தமிழர் வகுத்த 103

*பண்களில் இந்த இராகம் நட்டபாடைப் பண்ணாகும். இவர் நான்கு மல்லாரிகளை இயற்றியுள்ளார்.*

**வர்ணங்கள்**

*ஆரம்ப பயிற்சி வடிவங்களில் இறுதியில் இசைக்கப்படுவது வர்ணமாகும். தருமபுரம் கோவிந்ராஜன் அவர்கள் ''அபிராமி இசை வண்ணமாலை''யில் 25 வர்ணங்களை சுவர தாளக்குறிப்புடன் வெளியிட்டுள்ளார். இந்த வர்ணங்கள் சிறந்த இராக அழகு, தாள அழகு, சாகித்தியச் செறிவுப் பெற்று விளங்குகின்றன.*

*உதாரணமாக,*

***இராகம் : ரஞ்சனி*** ***தாளம்: ஆதி***

*முதல்*

***கருணை செய்வாய் ரஞ்சனி***

***புவியில் வஞ்சும் தீர்த்திட***

***இடை***

***மாதே உன்னை நம்பியே***

***ஆடி பாடி வேண்டினோம்***

***இறுதி***

***தாவரமனைத்தும் சுந்தரி***

***வெளிவராத கீர்த்தனைகள்***

*கர்நாடக இசை வகைகளில் கீர்த்தனைகள் முக்கிய இடம்பெறும். கீர்த்தனைகள் எளிமையாகவும், பழக்கமான இராகங்களிலும் பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றதாகவும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகையில் கோவிந்தராஜன் அவர்கள் 13 கீர்த்தனைகளை முதல்நிலை, இடைநிலை, இறுதிநிலை என்ற அமைப்பில் இயற்றியுள்ளார்.*

***இராகம் :கவர்நாங்கி*** ***தாளம் : ரூபகம்***

***முதல்நிலை***

***தாமதம் ஏன் சாமி***

***நின்னருள் தர இன்னும்***

***இடைநிலை***

***தேவளம் கொண்ட நற்***

***தேவசேனா பதியே***

***இறுதிநிலை***

***பூதநாதனின் செல்வனே***

**பிரபாதிகம் கொண்டோனே**

**தேனென விளிக்கும்**

**சுந்தர வண்ணனே**

**தில்லானாக்கள்**

கோவிந்தராஜன் அவர்கள் இந்தோள இராகத்தில் மூன்றென் அடதாளத்தில் முருகன் மீது தில்லானாவை இயற்றியுள்ளார்

**இராகம் : இந்தோளம் தாளம்: மூன்றெண் அட**

**முதல் நிலை**

**தீம் த தீம் த தீம் தனதிரனா திரனா**

**முடிவுரை**

தருமபுரம் அ.கோவிந்தராஜன் அவர்கள் சிறந்த நாதஸ்வர கலைஞராகவும், இயல்இசை இலக்கண ஆசிரியராகவும், இசைக்குருவாகவும், இயலிசைப்படைப்பாளராகவும் திகழ்ந்துள்ளார். உலகிலேயே நாதஸ்வரகலைஞர்களால் முதல் நூலை வெளியிட்ட பெருமைக்குரியவர். இசை உலகில் 40 வருடங்கள் தடம் பதித்துள்ளார். பிறந்தேதியிலே அதே மாதத்தில் 30.06.1993 அன்று தனது 62 வயதில் மறைந்தார். அவரது வாழ்நாள் குறுகியகாலம் என்றாலும். இவரது இசைப்பணயம் நெடுந்தூரம் வரை கடந்துள்ளதனை நம்மால் அறியமுடிகின்றது.

**சான்றாதாரங்கள்**


1.முனைவர் கே.ஏ.பக்கிரிசாமி பாரதி, இந்திய இசைக்கருவூலம், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, சென்னை, 2009

2.டாக்டர். பி.டி.செல்லதுரை,தென்னக இசையியல், வைகறை பதிப்பகம், 1984.

3.பா.ஜனனி, இசைப்பணியில் தருமபுரம். அ.கோவிந்தராஜன், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், 2019.


*References:*


*1. Dr. K.A. Pakkirisamy Bharathi, Indian Musical Instruments, Tamil Nadu Government Music College, Chennai, 2009.*

*2. Dr. P.T. Chelladurai, South Indian Musicology, Vaigarai Publications, 1984.*

*3. B. Janani, Dharmapuram in Musical Service: A. Govindarajan, M.Phil. Dissertation, Annamalai University, 2019.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com